**ஒதுக்கீட்டுத் தலைப்பு 261 - மாவட்டச் செயலகம், காலி**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

**1.1 மாவட்டச் செயலகத்தின் பிரதான பணிகள்**

(அ) தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் கலாசார, சமய மற்றும் பிற காலரீதியான அரசாங்க விழாக்களை ஏற்பாடு செய்யும் தலைவராகச் செயற்படுதல்

(ஆ) சகல தேர்தல் நடவடிக்கைகளிலும் அதாவது சனாதிபதி தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின்போது தேர்தல் ஆணையாளரது பிரதிநிதியாக மாவட்ட தெரிவத்தாட்சி உத்தியோகத்தராகப் பணியாற்றி நியாயமானதும் பாரபட்சமற்றதுமான தேர்தல்கள் நடைபெறுவதற்கு உதவியளித்தல்

(இ) மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு, மாவட்ட அபிவிருத்திக் குழுச் செயலாளராகப் பணியாற்றி மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல், அமுலாக்குதல், மேற்பார்வை செய்தல்.

(ஈ) மாவட்டத்தின் 19 பிரதேச செயளாளர்களுடனும் மாவட்ட நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தலைவராகப் பணியாற்றுதல்.

(உ) பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள், தொடர்பாக வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொருட்டு அவர்களது வருவாயைச் சேகரித்தல், கணக்கிலிடுதல், திறைசேரிக்கு அனுப்பி வைத்தல், குறித்த வருவாய்க் கணக்கீட்டு உத்தியோகத்தர்களை அறிவூட்டல்

(ஊ) மாவட்ட அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் சகல அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களது பிரதிப் பிரதிநிதியாக பணியாற்றி ஒவ்வொரு திணைக்களத்தினதும் குறிக்கோள், நோக்கம் மற்றும் பணிகள் நிறைவேறுமாறு ஒருங்கிணைந்து செயலாற்றல்

(எ) வறட்சி, வெள்ளம், புயல், கடல் பிரவாகம் போன்ற இடர்களின் போது அரசாங்கத்தின் பிரதிநிதியாகப் பணியாற்றி இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல், அமுலாக்கல், மேற்பார்வைசெய்தல் மற்றும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வாயிலாக மக்களின் வாழ்க்கையைச் செம்மையுறச் செய்து நிலையான இயல்பு நிலைக்கு வர உதவி செய்தல்

(ஏ) மாவட்டத்தினுள் காணி உறுதி, பிறப்பு, இறப்பு மற்றும் திருமணங்களைப் பதிவுசெய்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

(ஒ) மாவட்டத்தினுள் ஓய்வூதிய நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

## 1.2 மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) காலி கடவத்சர
(ஆ) தவலம
(இ) நியாகம
(ஈ) அம்பலாங்கொடை
(உ) கரந்தெனிய
(ஊ) எல்பிட்டிய
(எ) நெலுவ
(ஏ) நாகொடை
(ஐ) பலப்பிட்டிய
(ஒ) ஹிக்கடுவ
(ஓ) அக்மீமன
(ஔ) பெந்தோட்டை
(க) ஹபராதுவ
(கா) பத்தேகம
(கி) யக்கலமுல்ல
(கீ) போப்பே போத்தல
(கு) வெலிவிட்டிய
(கூ) இமதூவ
(கெ) கோனபினுவல

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

காலி மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 செப்தெம்பர் 05 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புரைகள், கருத்துரைகள், கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல்களது மாதிரிகளின் செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப்பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்கும்

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம் காலி மாவட்டச் செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்

கூற்றுக்கள் இங்கே (அ) முதல் (உ) வரையிலான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 முதல் 1.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வுக் காண்புகளைத் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் ஏடுகளைப் பேணாமை**

இரண்டு நிலையான வைப்புச் சான்றிதழின் கூட்டுத்தொகையான ரூபா 1,026,072 மீதியினை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக நிலையான வைப்புச் சான்றிதழ் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(i) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

மீளாய்வாண்டின் போது மாவட்டச் செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 922,425,763 ஆகும். ஆண்டு முடிவில் அதில் ரூபா 91,549,108 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, தேறிய சேமிப்பு ரூபா 6,934,655 ஆகும். அது மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 0.75 சதவீதம் ஆகும். விபரம் வருமாறு

| செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய நிதியேற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருவன | 611,975,000 | 862,625,763 | 674,209 | 0.08 |
| மூலதனம் | 59,800,000 | 59,800,000 | 6,260,446 | 10.47 |
| மோத்தம் | 671,775,000 | 922,425,763 | 6,934,655 | |

**(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய 22 அமைச்சுக்கள் மற்றும் 15 திணைக்களங்களால் ரூபா 4,099,032,889 கூட்டுத்தொகையுடைய நிதி வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 3,731,860,150 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க சேமிப்பு ரூபா 367,172,734 ஆக இருந்ததுடன் அது பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டில் 9 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. திவி நெகும நிகழ்ச்சித் திட்டம் 2012 இன் IV ஆவது கட்டத்தின் கீழ் 44 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு 9,694 பக்கட் மரக்கறி விதைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 6,165 பக்கட் விதைகள் மாத்திரம் பயிரிடப்பட்டிருந்தன. வழங்கப்பட்ட அளவில் அது 64 சதவீதமாக இருந்ததுடன் பயிரிடப்பட்ட விதைகளின் அளவில் 77 நலன்பெறுனர்களின் விதைகள் மாத்திரம் மிகவும் நல்ல நிலையில் காணப்பட்டதுடன் அது பயிரிடப்பட்ட அளவில் 1.25 சதவீதமாகும் இதற்கிணங்க திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விதைப் பக்கட்டுக்களை வழங்கும் செயற்திட்டம் எதிர்பார்த்த மட்டத்தை சிறப்பாக அடையவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**(iii) அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்தல்**

2012 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் பாதீட்டிலிருந்து வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளிலிருந்து முறையே 2 சதவீதம் மற்றும் 9 சதவீதம் சேமிக்கப்பட வேண்டிய போதிலும் மாவட்டச் செயலகத்தினால் உரியவாறு மீண்டுவரும் செலவுகளிலிருந்து சேமிக்கப்படவில்லை.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றம் விதித்துள்ள வரம்பு**

விடய இலக்கம் 26101 – அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றம் விதித்த வரம்பு மற்றும் உள்ளபடியான பெறுமதி என்பன கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவுமீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய வரம்பு | உள்ள படியானது | அதிகுறைந்த வரம்பு | உள்ள படியானது | அதிகூடிய வரம்பு | உள்ள படியானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 51,000,000 | 47,114,743 | 44,000,000 | 46,387,985 | 220,000,000 | 196,920,280 |

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

2013 ஏப்ரல் 30 வரை மாவட்டச் செயலகம் தீர்த்துவைக்காத கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 194,086 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அது 2006 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வந்தன.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்தின் பொது வைப்புக் கணக்குகளின் மீதி ரூபா 368,496 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அது 02 ஆண்டுகளை மிகைத்திருந்தும் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் வருமானத்திற்குச் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நல்லாட்சியும் கணக்களிப் பொறுப்பும்

### 1.6.1 கூட்டுத் திட்டம்

சகல அமைச்சினது செயலாளர்கள், மாகாண சபைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய

பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கமைய, 2010 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னோக்கியவாறு குறைந்தது 3 ஆண்டுகளுக்கான கூட்டுத் திட்டம் ஒன்று ஆண்டின் ஆரம்பத்தில் மாவட்டச் செயலகத்தால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2010 ஏப்ரல் 25 ஆந் திகதியே தயாரிக்கப்படடிருந்தது. அதில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச செயலகங்களுக்காக வெவ்வேறாக கூட்டுத்திட்டங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) மாவட்டச் செயலகத்துடன் இணைந்த 19 பிரதேச செயலகங்கள் காணப்பட்ட போதிலும், அந்த அலுவலகங்களின் பொருட்டு மாவட்டச் செயலகத்தினால் ஆற்ற வேண்டிய பணிகளை எவ்வாறு திட்டமிடுதல் என்பது தொடர்பாக இந்த கூட்டுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 வருடாந்த செயற்பாட்டுத்திட்டம்

மேலே 1.6.1 ஆம் பந்தியில் குறிப்பிட்ட பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டுத்திட்டத்திற்கு அமைவாக 2010 மற்றும் அதனை முன்னோக்கி மாவட்ட செயலகத்தினால் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டுத் திட்டமானது அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்காததன் காரணமாக செயற்பாட்டுத் திட்டத்திலும் அக்குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 1.7 முகாமைத்துவப் பலவீனம்

ஒரு தடவை வழங்கப்பட்ட பொது 172 பற்றுச்சீட்டுக்களின் 05 புத்தகங்கள் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்த போதிலும் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்கும் சொந்தமான பொது 172 பற்றுச்சீட்டுக்களின் 7 புத்தகங்களும் காசாளருக்கு வழங்கப்பட்டிருந்தமை 2012 திசெம்பர் 14 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் பொது அவதானிக்கப்படடன.

## 1.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) சிரேஷ்ட நிலை | 63 | 58 | 05 |
| (ii) இரண்டாம் நிலை | 1481 | 1257 | 224 |
| (iii) மூன்றாம் நிலை | 43 | 31 | 12 |
| (iv) ஆரம்ப நிலை | 170 | 163 | 07 |
| மொத்தம் | 1757 | 1509 | 248 |

மீளாய்வாண்டின் இறுதி வரை 248 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.